# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 46 — 1973 පෙබරවාරි 09 වැනි සිකුරාදා — 1973.02.09

46 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 145 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 151 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 152 |


குறிப்பு.—நீதிமன்றங்களின் மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 1973 ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ந் திகதிய ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப்பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறைச்சாலைத் திணைக்களம்

1973 ம் நிதியாண்டில் கொழும்பு சிறைச்சாலைகள், (வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியற்சாலை, புதிய மகசீன்) மகறை சிறைச்சாலைகளுக்கு உணவுப் பொருட்கள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் இலங்கையரிடமிருந்து (இலங்கையர் என்பவர் வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாய் இருப்பவராகும்) மேற்கூறிய சிறைச்சாலைகளுக்கு 1.3.73 ல் இருந்து 31.12.73 வரைக்கும் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரகாரர்கள் தமது மேற்கோள்களில் உணவுகள் எனக் காட்டாது பொருள்கள் என்றே காட்டும்படி வேண்டப்படுகின்றனர். தாம் கேள்விப்பத்திரங்களை இணைப்பதற்கு விரும்பும் விடயங்களை அது தொடர்பான பட்டோலை அல்லது பட்டோலைகளில் மேற்கோள் காட்ட வேண்டும். அவர்கள் பட்டோலைகள் என்பனவற்றில் ஏதாவது ஒன்றையோ அல்லது கூடுதலாகவோ மேற்கோள் காட்டலாம். ஒவ்வொரு பட்டோலையின் மட்டிலும் தனித்தனிப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வது கேள்விப்பத்திர சபையின் விருப்பத்திற்குள்ளானதாகும். வழங்கப்படவேண்டிய பொருள்கள் பின்வரும் பட்டோலைகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளது :

பட்டியல் " டி "

தேங்காய்

செவ்விளனீர்

பட்டியல் " எப் "

காய்கறிகளும் பழவகைகளும்

வகுதி ஏ—இலைவகைக் காய்கறிகள்
வகுதி பி—பழவகைக் காய்கறிகள்
வகுதி சி—கிழங்கு வகைக் காய்கறிகள்
வகுதி டி—மற்றைய காய்கறிகள்

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்று முகவரியிட்டிருத்தல் வேண்டும். ஒரு விண்ணப்பப்பத்திரத்தில் ஒரு பட்டியலுக்குரிய விலை வீதம் மட்டுமே பொருளடக்கம் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது கேள்விப்பத்திரகாரர் அல்லது அவருடைய பிரதிநிதி நேர்முகமாகச் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை அதிகாரி, ஜே. பி. டெல்கொடை அவர்களிடம் நேரில் கையளித்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடதுகை மேல் பக்கத்தில் " ......சிறைச்சாலை......பட்டியலில் உள்ள உணவுப் பொருட்கள் விநியோகம் " என்று குறிப்பிட்டுத் தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்ற முகவரிக்கு 9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆ திசெம்பர் மீ 15 ந் உ.

கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடங்களுக்குப் பின், அதாவது காலை 10.35 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரகாரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்க லாம்.

6. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோகிக்கப் படும் பத்திரத்திலேயே இருக்க வேண்டும். அப்படி இல்லாத கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 9 ம் பந்தியில் குறிப்பிடப் பட்டிருக்கும் நிலையங்களுக்குரிய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதிக்கு முன்தினம் மாலை 2.00 மணி வரையினுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

7. கேள்விப்பத்திரங்களில் கொடுக்கும் வீதங்களை முடிவுத் திகதியி லிருந்து மூன்று மாதங்களுக்குத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதை கேள்விப்பத்திரகாரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த் தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத்தல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு மேலே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தைச் சிறைச்சாலைத் திணைக்களத் திலோ கச்சேரியிலோ (கொழும்புக் கச்சேரியைத் தவிர) கட்டிப் பற்றுச் சீட்டைப் பெற்று அதனைக் காண்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்தபின் 10 நாட் களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக்கட்டுப்பணத்தைக் கட்டத் தவறினால் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை அரசாங்கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டுத் தவறிய ஒப்பந்தக் காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும். மேலும் கேள்விப்பத்திரகாரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாகக் கடமை புரியும் சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கை நாணயம் ரூபா மூவாயிரம் (ரூபா 3,000) தண்டப் பணமாகச் செலுத்த நேரிடும். இப்பணத்தைச் சட்ட விதிப்படி அறவிடப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற செய்தியைக் கேள்விப்பத்திரத்தில் கொடுக் கப்பட்டுள்ள முகவரிக்குத் தபால் மூலமாக அல்லது நேரிலோ அனுப்பப் பட்டால் அது அவருக்குக் கிடைத்ததென்று கருதப்படும். மற்றும் எல்லா முற்பணமும் கையொப்பமிட்டவுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

| பட்டியல் | கேள்விப்பத்திர முற்பணம் | பிணைப்பணம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதி யும் திறக்கப்படும் திகதியும் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| டீ .. | 100 .. | 1,500 | 22.2.73 |
| எப் .. | 100 .. | 1,500 | 22.2.73 |

10. பட்டியலில் குறிப்பிட்ட பிரகாரம் முற்பணத்தை வேறு வேறாகக் கட்ட வேண்டும் என்பதைக் கேள்விப்பத்திரகாரர் குறிப்பாகக் கவனித் தல் வேண்டும். விநியோகம் செய்ய விரும்பும் வீதத்தை இலக்கத்திலும் சொல்லிலும் குறிப்பிடல் வேண்டும். இலக்கத்திற்கும் சொல்லிற்கும் வித்தியாசம் இருப்பின் அல்லது வீதத்தைச் சொல்லில் குறிப்பிடத் தவறினால் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

11. ஏற்றுக்கொண்டவுடன் கேள்விப்பத்திரகாரர்கள் தாங்கள் ஒப்பந் தத்தைச் சரிவர நடத்தி முடிப்பார்களெனப் பிணை நிற்கக்கூடிய இரண்டு பொறுப்பானவர்களின் பெயர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் சரிவர நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டு, பிணை சேர்ந்த ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். பிணைப் பணத்தின் விபரம் 9 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வேண்டிய விபரங்களை 6 ம் பந்தியில் குறிப்பிட்ட அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

13. கேள்விப்பத்திரங்கள் எல்லா நிபந்தனைகளுக்கும் அடங்கியிரா விடில் நிராகரிக்கப்படும்.

14. கேள்விப்பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றை யுமோ அல்லது ஒரு கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

15. கேள்விச் சபையின் அனுமதியில்லாமல் ஒப்பந்தத்தை உப வாடகைக்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஒப்பந்தக்காரரினால் இன்னொரு வரைத் தன் சார்பாகக் கடமையாற்றும்படி கொடுக்கப்படும் தத்துவ அதிகாரத்தை நிராகரிக்க அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

16. ஒப்பந்தத்தின்படி சேவையை நிறைவேற்றுவதற்காக " இலங்கை யரையே " சேவையில் ஈடுபடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட நிலையங்களின் அதிகாரிகள் ஒப்பந்தக்காரரினால் நியமிக்கப்பட்ட தொழிலாளி யாரேனும் ஏற்றுக்கொள்ளச் சம்மதமில்லாவிட்டால், அதனை ஆட்சேபித்து எழுத்தில் கொடுத்தால் ஒப்பந்தகாரர் அதன்படி குறிப்பிட்ட தொழிலாளிகளை சேவையில் ஈடுபடுத்தல் ஆகாது.

17. இதற்கு முன் அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யாத ஒரு கேள்விப் பத்திரகாரர் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது தன் னுடைய சொத்துக்களின் பெறுமதியை, காணிகள் எந்தெந்த வட்டாரத்தி லுள்ளன என்பதைக் குறித்து, மாவட்டக் காரியாதிகாரியினால் உறுதிப் படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

இத்திணைக்களத்துடன் இதுவரையில் ஒப்பந்தம் செய்து கொண்ட வர்கள், தற்போது விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்யாதிருந்தால், இதற்கு முன் எந்த மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்தவர்கள் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

18. இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கடமையாற்றும் சிறைச் சாலை ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இப் பதவிப் பெயர் அதனைத் தற்போது வகிப்பவரையும், இதன் பின் அப் பதவியை வகிப்பவரையும் குறிக்கும்.

19. மேற்கொண்ட விபரங்களைச் சிறைச்சாலைத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஏ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்,

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு சனவரி மீ 27 ந் உ.

2–322/1—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

## சிறைச்சாலைத் திணைக்களம்

### சிறைச்சாலையில் 1973 ம் ஆண்டில் பாண் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

இலங்கையரிடமிருந்து (" இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசைகளாயிருப்பவராகும்) கீழ்க்காணும் பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிறைச்சாலைகளில் சமைத்த உணவு விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அந்தந்தச் சிறைச்சாலை அதிகாரிகளால் கோரப்படுகின்றன. 1973.2.27 ல் 11.00 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரத்திலிருந்து 5 நிமிடத்திற்குப் பின் அதாவது காலை 11.05 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

2. கேள்விப்பத்திரகாரர் தாங்கள் விநியோகம் செய்ய விரும்பும் வீதத்தை இலக்கத்திலும் சொல்லிலும் குறிப்பிடல் வேண்டும். இலக்கத் திற்கும் சொல்லிற்கும் வித்தியாசம் இருப்பின், அல்லது வீதத்தை சொல்லில் குறிப்பிடத் தவறினால் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படலாம்.

3. விநியோகிப்பதற்கான விபரங்கள் பின்வருமாறு :—பாண் பழையதாயில்லாமலும் சரியான முறையில் சுடப்பட்டு ஒவ்வொன்றும் தேவைப்படும் நிறையில் 73.3.1 இருந்து 73.12.31 வரை விநியோகிக்க வேண்டும்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, கீழே குறிப்பிட்ட படிவத்திலுள்ள பொருத்த மான அதிகாரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அவரிடமோ அல்லது அவருடைய பிரதிநிதியிடம் நேர்முகமாகக் கையளித்து அதற்கான பற்றுச் சீட்டைப் பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடதுகை மேல் பக்கத்தில் " 1972–73 ல் ........................ பாண் விநியோகிக்க கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு தகுந்த சிறைச்சாலை அதிகாரிக்கு 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பத்திரங்களிலேயே இருத்தல் வேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. கேள்விப்பத்திரங்களில் கொடுக்கும் வீதங்களை முடிவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதை கேள்விப்பத்திரகாரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்திலே ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த்தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத்தல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தை சம்பந்தப்பட்ட சிறைச்சாலையிலோ அல்லது சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கச்சேரிகளிலோ (கொழும்புக் கச்சேரியைத் தவிர) கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்று அதனை சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரியின் காரியாலயத்தில் காண்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரக்காரரேனும், அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்த பின், 10 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக் கட்டுப் பணத்தைக் கட்டத் தவறினால் அல்லது கட்ட மறுத்தால், அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை அரசாங்கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு, தவறிய ஒப்பந்தக்காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற செய்தியை கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பப்பட்டால் அது அவருக்குக் கிடைத்ததென்று கருதப்படும். மற்றும் எல்லா முற்பணமும், ஒப்பந்தம் கையொப்பமிட்டவுடன் திருப்பிக் கொடுக்கப்படும். பட்டியலில் குறிப்பிட்ட பிரகாரம் முற்பணத்தை வேறு வேறாகக் கட்ட வேண்டும் என்பதைக் கேள்விப்பத்திரகாரர் கவனித்தல் வேண்டும்.

10. ஏற்றுக்கொண்டவுடன் கேள்விப்பத்திரகாரர்கள், தங்கள் ஒப்பந்தத்தை சரிவர நடத்தி முடிப்பார்களென பிணை நிற்கக்கூடிய இரண்டு பொறுப்பானவர்களின் பெயர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும்.

11. இது சம்பந்தப்பட்ட எல்லா விபரமும் பட்டோலையில் குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

12. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரகாரர் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கத்தின் சார்பாக கடமைபுரியும் சிறைச்சாலை ஆணையாளரோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இப்பதவிப் பெயர் அவ்வப்போது இப்பதவியை வகிக்கும் உத்தியோகத்தரைக் குறிக்கும்.

எ. எ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு சனவரி மீ 27 ந் வ.

**பட்டோலை**

| சிறைச்சாலை நிலையம் | கேள்விப்பத்திரம் முற்பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பிணைப்பணம் ரூபா | கேள்விப்பத்திரத்தை ஏற்கும் சிறைச்சாலை அதிகாரி |
|---|---|---|---|
| (1) நீர்கொழும்பு | 25 | 200 | சி. அ. நீர்கொழும்பு |
| (2) மகியங்கனை | 25 | 200 | சி. அ. பதுளை |

2–322/2—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

**சிறைச்சாலைத் திணைக்களம்**

1.3.73 இல் இருந்து 31.12.73 வரை மகியங்கனை சீரமைப்புப் பாசறைக்கு காட்டுவிறகு விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் பதுளைச் சிறைச்சாலை அதிகாரியால் 27.2.73 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விறகின் விட்டம் 3 அங்குலத்துக்குக் குறையாமலும் 12 அங்குலத்துக்குக் கூடாமலும், நீளம் 18 அங்குலத்துக்குக் குறையாமலும் 36 அங்குலத்துக்குக் கூடாமலும், நன்றாகக் காய்ந்தும் மொக்கு கெவர் இல்லாததும் உடன் பாவிப்புக்கு ஏற்றதாகவும் கீழ்காணும் ஏதாவதொரு இனத்தைச் சேர்ந்ததாகவும் இருக்க வேண்டும். கொடபற, தியபற, கட்டுகறல, மீ, மில்ல, கொற, புளி, தவட்ட, பாலை, மிகிரிய, தன, மோற, கும்புக், முனமல், மாதன், அல்போ ஆகிய வயிர மர வர்க்கங்களை சேரவேண்டும். அந்தருக்கு 14 இருத்தல் வரை காய்தலுக்கும், பட்டைக்கும் குறைக்கப்படும். கீழ்க்காணும் கந்த, கக்குன, ஈரிய, கிக்மய பொட ஆகிய மென் மரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

2. சிறைச்சாலையிலோ அல்லது கிட்டிய கச்சேரிகளிலோ ரூபா 10 கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்று அதனைச் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரியின் காரியாலயத்தில் காண்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று மூலமும் பிரதியுமாக அனுப்பவேண்டும். கீழ்க்காணும் தாபனங்களுக்குக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முற்பணம் கட்டத் தேவையில்லை :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் ;

(ஆ) அரசாங்கத்தால் நடாத்தப்படும் மற்றைய வர்த்தக நிறுவனங்கள்;

(இ) கிராம அபிவிருத்திச் சபைப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள் ;

(ஈ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

3. கேள்விப் பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடதுகை மேல் பக்கத்தில் " காட்டு விறகு விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரம் " என்று குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாதவர்கள் நேர்முகமாகச் சிறைச்சாலை வாயிலில் இருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்திற்கு முன்பாகச் சேர்க்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் விலைகள் எழுத்துக்களிலும் இலக்கங்களிலும் இருக்க வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்தலின் 10 நாட்களுக்குள் சிறைச்சாலை அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்யத் தவறின் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை இழந்துவிட நேரிடுவதோடு அரசாங்கம் ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு, தவறிய ஒப்பந்தக்காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும்.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி நேரத்திலிருந்து 5 நிமிடத்திற்குப்பின் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

7. கேள்விப்பத்திரங்களில் கொடுக்கப்படும் வீதங்களை முடிவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குத் திறந்து வைத்திருக்கவேண்டும்.

எ. எ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ந் வ.

மகியங்கனை சீரமைப்புப் பாசறைக்கு காட்டுவிறகு விநியோகிப்பதற்கான பிணைப்பணம் ரூபா 200. கேள்விப்பத்திரங்கள் பதுளை சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து 27.2.73 காலை 10 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2–322/3—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

## சிறைச்சாலைத் திணைக்களம்

**1973 ஆம் ஆண்டிற்கு, கொழும்பு (வெலிக்கடை, கொழும்பு விளக்க மறியற்சாலை, புதிய மகசின்), கண்டி (போகம்பறை, கண்டி, விளக்க மறியற்சாலை) மகறை, வத்துப்பிட்டிவல, குண்டசாலை ஆகிய சிறைச்சாலைகளுக்கு செத்தல் மிளகாய் விநியோகித்தல்**

மேற்கூறிய சிறைச்சாலைகளுக்கு 1973.03.10 ல் இருந்து 1973.12.31 வரை செத்தல் மிளகாய் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் இலங்கையிடமிருந்து கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரகாரர் நல்ல ரக செத்தல் மிளகாயைச் சிறைச்சாலைக்கு விநியோகிக்கக் கூடிய விலைகளை கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட வேண்டும். ருத்தலுக்குரிய விலைகளைக் குறிப்பிட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களைக் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோகிக்கப்படும் பத்திரத்திலேயே இருக்கவேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு சிறைச்சாலைகளுக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்தினம் மாலை 2.00 மணிவரையிலும் கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

4. எல்லா கேள்விப் பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9, என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விரும்பினால் கேள்விப்பத்திரகாரர் அல்லது அவருடைய பிரதிநிதி கேள்விப்பத்திரங்களைச் சிறைச்சாலைத் தலைமைக்காரியாலயத்தில் வைத்திருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் போடலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடது கைமேல் பக்கத்தில் " ........சிறைச்சாலைக்கு செத்தல் மிளகாய் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்ற முகவரிக்கு கீழே பட்டியலில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடத்துக்குப் பின், அதாவது காலை 10.35 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

6. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த்தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இடுதல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தை சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கச்சேரிகளிலோ (கொழும்புக் கச்சேரி தவிர) கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்று அதனைக் காண்பிக்கவேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்படும் எந்த கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்தபின் 10 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக் கட்டுப்பணத்தைக் கட்டத் தவறினால் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகை அரசாங்கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு தவறிய ஒப்பந்தகாரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும். மேலும் கேள்விப்பத்திரகாரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடமைபுரியும் சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கை நாணயமாக ரூபா ஆயிரம் (ரூபா 1,000) தண்டப்பணமாகச் செலுத்த நேரிடும். இப்பணத்தை சட்ட விதிப்படி அறவிடப்படும்.

9. கேள்விப் பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, அல்லது ஒரு கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

10. இதற்கு முன் அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யாத ஒரு கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது தன்னுடைய சொத்துக்களின் பெறுமதியை, காணிகள் எந்தெந்த வட்டாரத்திலுள்ளன என்பதைக் குறித்து, மாவட்ட காரியாதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

11. மேற்கொண்ட விபரங்களைச் சிறைச்சாலை ஆணையாளரது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9.
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ந் உ.

ஏ. ஏ. டி. சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

**பட்டோலை**

| சிறைச்சாலை | கேள்விப்பத்திர முற்பணம் ரூ. ச. | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூ. ச. | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் திறக்கப்படும்திகதியும் |
|---|---|---|---|
| கொழும்புச் சிறைச்சாலைகள் | 50 00 | 1,000 00 | 22.2.73 |
| மகறை சிறைச்சாலைகள் | 25 00 | 500 00 | |
| கண்டிச் சிறைச்சாலைகள் | 25 00 | 500 00 | |
| வத்துப்பிட்டிவெல சிறைச்சாலை | 25 00 | 200 00 | |
| குண்டசாலைச் சிறைச்சாலை | 25 00 | 200 00 | |

2-322/4—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறையிலுள்ள சுமார் 10,000 தொன் கழிவு உலோகத்தைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை உண்ணாட்டு, வெளிநாட்டு கேள்வியாளர்களிடமிருந்து கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சின் கேள்விச் சபைத் தவிசாளர், அ. பெ. எண். 576, கொழும்பு 1; 1973 மே 11 ஆம் திகதி மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக் கொள்வார், 1973 மே 11 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கொழும்பு 1 இல் உள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான ஆவணங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2,500/- செலுத்திக் கொழும்பிலுள்ள, கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுச் சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப்படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்பும் பணம், கேள்வி நிபந்தனைகளுக்கு அமையத் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளருக்கும், கேள்வி நிபந்தனைகளுக்கு முற்றுகவமைந்த பிற கேள்வியாளருக்கும், கேள்வி சமர்ப்பிக்க உத்தேசித்த ஆனால் சமர்ப்பிக்காது கேள்விகள் வழங்கும் நேரத்துக்கு முன் கேள்விச்சபைத் தவிசாளருக்குச் சாதனங்களை மீள வழங்கியவர்களுக்கும் தெரியப்பட்ட கேள்வியாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் மீளச் செலுத்தப்படும்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவு அஞ்சல் மூலம் கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சிலுள்ள கேள்விச் சபைத் தவிசாளருக்கு 1973 மே 11 ஆம் திகதி மு. ப. 9.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகளைப் பதிவு அஞ்சலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் தமது முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களைத் தாமோ அல்லது தமது முகவர்களோ கொழும்பு 1, 54 சதாம் வீதியிலுள்ள கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளரின் அறையிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடலாம்.

கேள்வி சம்பந்தமான ஆவணங்கள் 1973 மே 9 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

சி. ஹுடிகன்ஸ்
கப்பற்றுறை ஆணையாளர்
கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சின்
கேள்விச் சபைத் தவிசாளருக்காக.

2-349—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

## கமத்தொழில் திணைக்களம்

அரசாங்கப் பண்ணைகளில் நெல் அறுவடை செய்தல், சூடு வைத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
மேல் கூறப்பட்ட வேலைகள் சம்பந்தமான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1973.02.14 ந் திகதி மு.ப. 10 மணி வரையும் யாழ்ப்பாண (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் கமத்தொழில் அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கீழ்க்காணப்படும் பண்ணைகளில் நெல் அறுவடை செய்தல், சூடு வைத்தல், நெல் அறுவடைசெய்து முடிவடையச் செய்யும் காலம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன :

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| | பகுதி எண் | நெல் அறுவடை ஆரம்ப தினம் | இனம் | அறுவடை செய்யும் ஏக்கர் | ஒரு நாளுக்கு அறுவடை செய்யும் ஏக்கர் | நெல் அறுவடை முடியும் தினம் |
| கடியன் ஆறு கமத்தொழிற் பண்ணை : | | | | | | |
| | 1 | 1.3.1973 | பீஜீ 11–11 | 15 | 5 | 3.3.1973 |
| | 2 | 5.3.1973 | பீஜீ 11–11 | 6 | 3 | 6.3.1973 |
| | 3 | 7.3.1973 | பீஜீ 11–11 | 13 | 3 | 10.3.1973 |
| | 4 | 11.3.1973 | எல். டீ. 66 | 10 | 3 | 13.3.1973 |
| | 5 | 18.2.1973 | பீஜீ 34–8 | 12 | 3 | 22.2.1973 |
| கிளிநொச்சி கமத்தொழிற்பண்ணை | | | | | | |
| | 1 | 22.2.1973 | பீஜீ 11–11 | 10 | 5 | 23.2.1973 |
| | | 24.2.1973 | | | 5 | 25.2.1973 |
| | 2 | 26.2.1973 | எல்.டீ. 66 | 21 | 5 | 27.2.1973 |
| | | 28.2.1973 | | | 5 | 1.3.1973 |
| | | 2.3.1973 | | | 5 | 3.3.1973 |
| | | 16.3.1973 | | | 6 | 18.3 1973 |
| | 3 | 4.3.1973 | பீஜீ 34–8 | 25 | 5 | 5.3.1973 |
| | | 6.3.1973 | | | 5 | 7.3.1973 |
| | | 8.3.1973 | | | 5 | 9.3.1973 |
| | | 10.3.1973 | | | 5 | 11.3.1973 |
| | | 12.3.1973 | | | 5 | 13.3.1973 |
| வவுனியா கமத்தொழிற்பண்ணை | | | | | | |
| | சீ | 15.2.1973 | பீஜீ 34–6 | 9 | 2 | 19.2.1973 |
| | பீ2 | 20.2.1973 | பீஜீ 34–8 | 7 | 2 | 23.2.1973 |
| | பீ1 | 6.3.1973 | பீஜீ 11–11 | 10 | 2 | 10.3.1973 |
| | ஏ | 30.3.1973 | எச் 4 | 9 | 2 | 3.4.1973 |
| முருங்கன் கமத்தொழிற்பண்ணை | | | | | | |
| | 1 | 17.2.1973 | ஐ.ஆர். 20 | 5 | 4 | 19.2.1973 |
| | 2 | 20.2.1973 | ஐ.ஆர். 8 | 5 | 4 | 22.2.1973 |
| | 3 | 23.2.1973 | பீஜீ 11–11 | 20 | 4 | 28.2.1973 |
| | 4 | 3.3.1973 | பீஜீ 11–11 | 15 | 4 | 8.3.1973 |
| | 5 | 12.3.1973 | பீஜீ 11–11 | 10 | 4 | 15.3.1973 |
| | 6 | 6.3.1973 | பீஜீ 34–8 | 15 | 4 | 10.3.1973 |

பண்ணை அதிபராலோ, அல்லது அவரது பிரதிநிதியாலோ, குறிப்பிடும் இடத்திலேயே சூடு வைத்தல் வேண்டும். எந்த ஒரு நிலையிலும் நெல் மணிகளுக்கு ஊறு நிகழ்வதற்கும், நட்டம் ஏற்படுவதற்கும் இடம் கொடுக்கக்கூடாது. நெல் அறுவடை செய்தபின்பு, வயலில் மீதியாக இருக்கும் அடிக்கட்டை 6 அங்குளத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் நெல் அறுவடை செய்து முடிப்பதுடன் குறிப்பிட்ட திகதியின் பின் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தண்டனையாக நெற் பயிருக்கு ஏற்படும் நட்டத்திற்குச் சமமான அபராதம், கொந்தராத்துக்காரரினால் செலுத்தப்படல் வேண்டும்.

பயிரில் நட்டம் கணக்கிடுவது, நெல் அறுவடை செய்யும் கடைசித் திகதிக்குப் பின், நெல் அறுவடை செய்யாதிருக்கும் எல்லா ஏக்கருக்கும் ஒவ்வொரு ஏக்கருக்கும் நாளுக்கு $1\frac{1}{2}$ புசல் விகிதமாகும்.

எல்லா நடவடிக்கைகளும், பண்ணை முகாமையாளர் திருப்தியடையும்வண்ணம் இருத்தல் வேண்டும்.

குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 4 ஏக்கரில் நெல் அறுவடை செய்தல் வேண்டும்; மழையினால் பாதிப்பு ஏற்படாவிடில் அறுவடை செய்த தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள் சூடு வைத்தல் வேண்டும்.

மழையினால் பாதிப்பு ஏற்படும் எனக் கண்டால், பண்ணை அதிபர் எவ்விடத்தில் சூடு வைத்தல் வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார். கொந்தராத்துக்காரரின் கவலையீனத்தினாலோ, அல்லது அசட்டையினாலோ, நெல் மணிகளுக்கு ஊறு விளையுமாயின் அச்சேதத்தின் பெறுமதி கொந்தராத்துக்காரரிடமிருந்து அறவிடப்படும்.

இது சம்பந்தமாக அறவிடும் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேருக, ஒரு ஏக்கருக்கு எண் அடிப்படையிலேயே, குறிப்பிடுதல் வேண்டும். தெரிந்தெடுக்கப்படும் கேள்விக்காரர் முழு ஏக்கரையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

பண்ணை அதிபரினதோ, அல்லது அவரது பிரதிநிதியினதோ அறிவுறுத்துரைகளுக்கு அனுகூலமாக அவரின் ஒவ்வொரு நிபந்தனைக்கும் அல்லது பங்குக்குமாக நியமிக்கப்பட்ட தினத்தினுள் வேலையைச் செய்து முடித்தல்வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கும் வெவ்வேறுன கேள்விப்பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்கும் ரூபா 25 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்டு தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப.மு.ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுறம் மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு “

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் ” என்று குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விப்பத்திரக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப.மு.ஆ) தொடர்புகொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன் தினம் பகல் 12 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா போராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளரினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரக்காரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப.மு.ஆ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றைப் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்துமுடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தால் அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின செலவில் அவ்வேலையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையைக் கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்ததுல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலைசெய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்துமூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

“ இலங்கையர் ” என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியரின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தாஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எச். ஈ. நாணயக்கார,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.க. வும் ப.).

பேராதனை.

2–265—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

### இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம்

**சிப்பம் செய்வதற்கு வெறும் மரப்பெட்டிகளை வழங்கல்**

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்குப் பொறியிட்ட கேள்விகள், இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி நிபந்தனைகளை, பண்டகசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படும் காசுவைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

2-328/1—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46.

### இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம்

**முகத்துவாரத்தில் உள்ள எண்ணெய் நிறுவனசாலையில் 750 எம். ரி. தாய்ச்சியிணைக்கப்பட்ட உருக்கிலான நிலைக்குத்தான களஞ்சியத் தாங்கியை நிறுவிக் கொள்வதற்கும், எல்லைச்சுவரை அமைத்துக் கொள்வதற்கும் கேள்வி**

மேற்கூறிய சேவைக்கான பொறியிட்ட கேள்விகள், இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச்சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி நிபந்தனைகள், விவரக்கூற்றுக்கள், வரைவுகள் ஆகியவை பண்டசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

2-328/2—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

**ஏல விற்பனை**

28 ந் திகதி பெப்ரவரி மாதம் காலை 10.00 மணிக்கு மூன்று பன்றிகள் ஏலத்தில் விற்கப்படும்.

விற்பவைகளை உடனடியாக பணம் கொடுத்து எடுத்துச் செல்ல வேண்டும். இவைகள் பார்வைக்காக வேலை செய்யும் நாட்களில் 8.00 மணி முதல் 2.00 மணி வரையும் சனிக்கிழமைகளில் 8.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இருக்கும்.

பி. டப்லிவ். பெரெரா,
அதிகாரி,
திறந்தவெளிச் சிறைச்சாலை குண்டசாலை.

2-350—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

### காணி அபிவிருத்தி திணைக்களம்

**பகிரங்க ஏலவிற்பனை**

600 க. யார் மதிக்கக்கூடிய பிற வெட்டு, காணி அபிவிருத்தி திணைக்கள கிளிநொச்சி அரிவு ஆலையில் மாசி மாதம் 24 ந் திகதி காலை 9 மணியளவில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். பிற வெட்டுக்கள் 100 கன. யார் பிரமாணமாக விற்கப்படும்.

வாங்க விரும்புபவர்கள் மேற் காட்டிய பொருளை ஏல விற்பனவின் முன் காணி அபிவிருத்தி திணைகள கிளிநொச்சி அரிவாலையில் சாதாரண வேலை நாட்களில் காலை 7.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் சனிக்கிழமை நாட்களில் காலை 7.45 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணி வரையும் பார்வையிடலாம். வாங்க விரும்புபவர்கள் ஒன்றிற்கோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அல்லது எல்லாக் கூறுகளுக்குமோ கேள்விகள் கேட்கலாம்.

உரித்துடைய கேள்விக்காரர் எவ்வகையிலேனும், அவருக்குக் கொடுக்கப்பட்ட பிறவெட்டுக் கூறிலோ, அல்லது கூறுகளிலோ தெரியவோ அல்லது நிராகரிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்.

கேட்ட பிற வெட்டுகளின் பெறுமதியில் 10% பணத்தை அதே யிடத்தில் உடனடியாகக் கட்டியும் மிகுதிப்பணத்தை எனது அலுவலகத்தில் (3) மூன்று நாட்களுக்குள் கட்டியும் முடிக்க வேண்டும். அவ்வாறு (3) மூன்று நாட்களுக்குள் பணத்தைக் கட்டத் தவறின் கட்டிய 10% பணத்தையும் இழக்க நேரிடலாம்.

உரித்துடைய கேள்விக்காரர் தம்மால் வாங்கப்பட்ட பிற வெட்டுக்களை ஏல விற்பனவுத் திகதியிலிருந்து இரண்டு (2) கிழமைக்குள் அப்புறப்படுத்தல் வேண்டும்.

வாங்க விரும்புபவர்கள் ஏல விற்பனையில் கொடுக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக நடக்க வேண்டும். மேலும் ஏல விற்பனவு பற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் கீழ் கைச்சாத்திடுபவரிடமோ அல்லது கிளிநொச்சி அரிவாலை முகாமையாளரிடமோ அறிந்து கொள்ளலாம்.

சி. குமாரசாமி,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்திக் கந்தோர்,
மாங்குளம், 22. 1. 1973

2-230—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

### சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களம்

**உபயோகமற்ற பொருட்களின் ஏல விற்பனை**

1973 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தில் சில உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏல விற்பனை நடைபெறும்.

இப்பொருட்களை விற்பனை தினத்தன்று முற்பகல் 8.00 மணி தொடக்கம் பார்வையிடலாம். விற்பனைக்குரிய பொருட்களின் நிரலை கொழும்பு 1, லோற்றஸ் வீதியிலுள்ள சிவில் விமான போக்குவரத்து அதிகாரியிடமிருந்தும் இரத்மலானை விமான நிலைய அதிகாரியிடமிருந்தும் விண்ணப்ப மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்குரிய பணத்தை உடனே தலத்தில் வைத்து கொடுப்பதுடன் அப் பொருட்களை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு முன்னதாக எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

சீ. டபிள்யூ. எம். அபொன்சோ,
சிவில் விமான போக்குவரத்து அதிகாரி.

கொழும்பு,
1973 ஜனவரி 26.

2-235—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46